**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 142/மா/2023**

**நாள்: 03.10.2023**

திரு. V.P. ரவிச்சந்திரன்
திருப்பூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர். – எதிர்மனுதாரர்

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், கதவு எண். 4சி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.P. ரவிச்சந்திரன் என்பவரின் 22.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.04.2023–ல் பெறப்பட்டு, 142/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், கதவு எண். 4சி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.P. ரவிச்சந்திரன் என்பவர் தனது 22.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" திரு. கண்ணன், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்கள் ந.க. எண். 16/அ1/2023 நாள் 02.02.2023 கடிதத்துடன் திரு. ஆர். ராம்மோகன் குமார், உதவிப்பொறியாளர் திருப்பூர் மாநகராட்சி அவர்களின் மீது 2017ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளில் 102 எண்ணிக்கையில் ரூ. 3,50,00,000/– மதிப்பில் தணிக்கை தடைகள் உள்ளன. சட்ட விதிமுறைகள்படி தணிக்கை அறிக்கை பெறப்பட்ட இரண்டு மாதங்களில்

அதற்கான விளக்கத்தை அளித்திருக்க வேண்டும். ஆறு ஆண்டுகள் முடித்தும் உதவிப்பொறியாளர் விளக்கம் அளிக்கவில்லை.

மனு எண் மாநகராட்சி 40 நாள் 21.02.2023 மனு மூலமாக திரு. ஆர். ராம்மோகன் குமார், உதவிப்பொறியாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்கள் மீதான தணிக்கை தடைகளுக்கு விளக்கம் பெற்று நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையாளர் மற்றும் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்கள் இருவருக்கும் எனது மனுவை அனுப்பினேன். இன்று வரை அவர்கள் இருவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திரு. ஆர். ராம்மோகன் குமார், உதவிப்பொறியாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களின் மீதான தணிக்கை தடைகளுக்கு மாநகராட்சி ஆணையாளர்கள் மற்றும் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை ஆகியோர் ஆறு ஆண்டுகள் ஆகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் தணிக்கையின் நோக்கம் எந்த பயனும் இல்லாமல் குற்றம் செய்யும் மாநகராட்சி பணியாளர்களை தொடர்ந்து குற்றம் செய்ய தூண்டும் வண்ணமும், நேர்மையாக பணிபுரியும் பணியாளர்களை குற்றம் செய்ய தூண்டும் வகையில் உள்ளது. அதனால் திரு. ஆர். ராம்மோகன் குமார், உதவிப்பொறியாளர் திருப்பூர் மாநகராட்சி அவர்கள் ஊழல் செய்யும் நோக்கத்துடன் திட்டங்களை தயாரித்து கொள்ளையடித்து கொண்டு உள்ளார்கள்.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் தணிக்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் வண்ணம் திரு. ஆர்.ராம்மோகன் குமார், உதவிப்பொறியாளர் திருப்பூர் மாநகராட்சி அவர்களை பணிநீக்கம் செய்து துறைரீதியான நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 26.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3)** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.09.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4) மனுதாரர் 13.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

"திருப்பூர் மாநகராட்சியில் உதவிப்பொறியாளராகப் பணியாற்றும் திரு.ஆர். ராம்மோகன் குமார், என்பவர் மீது 2017 முதல் 2021ம் ஆண்டு வரை தணிக்கை பத்திகள் நிலுவையாக உள்ளன. விதிகளின்படி தணிக்கை அறிக்கை பெறப்பட்ட இரண்டு மாத காலத்தில் அதற்கான விளக்கத்தை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு மாநகராட்சி அளித்திருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை மேற்கண்ட விளக்கம் அனுப்பப்படவில்லை. இது குறித்து மாநகராட்சி ஆணையர் மற்றும் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆகியோருக்கு எனது புகார் மனுவை அனுப்பியிருந்தும், இதுவரை அவர்களால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட தணிக்கை பத்திகளுக்கான விளக்கங்களை உள்ளாட்சி நிதித்தணிக்கை அலுவலகத்திற்கு அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 22.4.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) திருப்பூர் மாநகராட்சியின் உதவி ஆணையர் 13.09.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

திருப்பூர் மாநகராட்சியில், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் எழுப்பப்படும் தணிக்கைத் தடைகள் உரிய கோப்புகள் மற்றும் விவரங்களுடன் பதில் அறிக்கை தயார் செய்யப்பட்டு, அமர்வுகள் (Sitting) மற்றும் கூட்டமர்வுகளில் (Joint Sitting) சமர்ப்பித்து நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே, எதிர்வரும் கூட்டமர்வில் குடிநீர் நிதி, ஆரம்பக் கல்வி நிதி மற்றும் வருவாய் மற்றும் மூலதன நிதி தலைப்பின் கீழ் உள்ள 102 தணிக்கை பத்திகளுக்கு பதில் அறிக்கை தயார் செய்யப்பட்டு உரிய விவரங்களுடன் தணிக்கைத் தடை நீக்கம் செய்ய மாநகராட்சி தயாராக உள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் 12.9.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 12.09.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

"மாநகராட்சியில் பணிகள் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பட்டியல் எழுத்தர், வரைவாளர், உதவிப்பொறியாளர், உதவிசெயற்பொறியாளர், செயற்பொறியாளர், மாநகரப் பொறியாளர் மற்றும் ஆணையர் ஆகியோரால் ஒப்புதல் செய்யப்பட்டு ஒப்பந்தத் தொகை வழங்கப்படுவதாகும். இந்நிலையில் உதவிப்பொறியாளர் மட்டும் இத்தொகைக்கு பொறுப்பு என்பது ஏற்புடையதல்ல. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் தணிக்கை தடை சம்பந்தப்பட்ட கோப்பு சமர்ப்பிக்கப்படாததாலும் விபரங்கள் அறிய இயலாத சூழ்நிலையில் தணிக்கை தடைகள் எழுப்பப்படுகிறது. இத்தணிக்கைத்தடைகள் மீது உரிய பதிலறிக்கைகள் தயார் செய்து உரிய விபரங்களுடன் தணிக்கையின் பார்வைக்கு சமர்ப்பித்து நிவர்த்தி செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆணையாளரால் அலுவலக ரீதியாகவும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை உள்ளது. தணிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை இப்பணிகள் மேற்கொண்ட ஒப்பந்ததாரர், உதவிப்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரும் பொறுப்பாவார்கள். இம்மாநகராட்சியில் 2122 தணிக்கை தடைகள் உள்ளது. இத்தணிக்கைத் தடைகள் அனைத்தும் மாநகராட்சிப்பணியாளர்கள் மீதும் ஆட்சேபணை எழுப்பட்டுள்ளது. இந்நிலையில் தணிக்கைத் தடையில் திரு. ராம்மோகன்குமார், உதவிப்பொறியாளர் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ள மனு ஏற்புடையதல்ல. மேலும், இத்தணிக்கைத் தடைகள் கூட்டமர்வு, மண்டல அமர்வு மற்றும் மாநில அமர்வு ஆகியவற்றின் மூலம் பதிலறிக்கை தயார் செய்து தணிக்கை நிவர்த்தி செய்யப்படுகிறது. தற்போது, புதிய விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால் கூட்ட அமர்வு நாள் இறுதி செய்யப்படாமல் உள்ளது. இதனால் பதிலறிக்கை தயார் செய்த நிலையில், நிவர்த்தி செய்ய கூட்ட அமர்வு தேவையாக உள்ளது. தணிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் தொகையிலும் முன் வைப்புத் தொகையிலிருந்தும் ஈடுசெய்ய வழிவகையுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படாது. மேலும், மனுவில் தெரிவித்துள்ள தணிக்கை தடையில் குடிநீர் நிதி, ஆரம்பக் கல்வி நிதி மற்றும் வருவாய் மற்றும் மூலதனநிதி தலைப்பின்கீழ் உள்ள 102 எண்கள் தணிக்கை பத்திகளுக்கு பதிலறிக்கை தயார் செய்யப்பட்டு உரிய விபரங்களுடன் தணிக்கைத் தடை நீக்கம் செய்ய தயார் நிலையில் உள்ளது "என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

" மனுதாரர் தனது மனுவில் திருப்பூர் மாநகராட்சியில் உதவிப்பொறியாளராகப் பணியாற்றும் உதவிப்பொறியாளர் திரு. ஆர். ராம்மோகன்குமார் என்பவர் மீது 2017 முதல் 2021ம் ஆண்டு வரை தணிக்கை பத்திகள் நிலுவையாக உள்ளன. விதிகளின்படி தணிக்கை அறிக்கை பெறப்பட்ட இரண்டு மாத காலத்தில் அதற்கான விளக்கத்தை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு மாநகராட்சி அளித்திருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை மேற்கண்ட விளக்கம் அனுப்பப்படவில்லை. இது குறித்து மாநகராட்சி ஆணையர் மற்றும் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆகியோருக்கு எனது புகார் மனுவை அனுப்பியிருந்தும், இதுவரை அவர்களால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குறிப்பிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில்"மாநகராட்சியில் பணிகள் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பட்டியல் எழுத்தர், வரைவாளர், உதவிப்பொறியாளர், உதவிசெயற்பொறியாளர், செயற்பொறியாளர், மாநகரப் பொறியாளர் மற்றும் ஆணையர் ஆகியோரால் ஒப்புதல் செய்யப்பட்டு ஒப்பந்தத் தொகை வழங்கப்படுவதாகும். இந்நிலையில் உதவிப்பொறியாளர் மட்டும் இத்தொகைக்கு பொறுப்பு என்பது ஏற்புடையதல்ல. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் தணிக்கைத் தடை சம்பந்தப்பட்ட கோப்பு சமர்ப்பிக்கப்படாததாலும் விபரங்கள் அறிய இயலாத சூழ்நிலையில் தணிக்கைத் தடைகள் எழுப்பப்படுகிறது. இத்தணிக்கைத்தடைகள் மீது உரிய பதிலறிக்கைகள் தயார் செய்து உரிய விபரங்களுடன் தணிக்கையின் பார்வைக்கு சமர்ப்பித்து நிவர்த்தி செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆணையாளரால் அலுவலக ரீதியாகவும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை உள்ளது. தணிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை இப்பணிகள் மேற்கொண்ட ஒப்பந்ததாரர், உதவிப்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரும் பொறுப்பாவார்கள். திருப்பூர் மாநகராட்சியில் 2122 தணிக்கைத் தடைகள் உள்ளது. இத்தணிக்கைத் தடைகள் அனைத்தும் மாநகராட்சிப்பணியாளர்கள் மீதும் ஆட்சேபணை எழுப்பட்டுள்ளது. இந்நிலையில் தணிக்கைத் தடையில் திரு. ராம்மோகன்குமார், உதவிப்பொறியாளர் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ள மனு ஏற்புடையதல்ல. மேலும், இத்தணிக்கைத் தடைகள் கூட்டமர்வு மண்டல அமர்வு மற்றும் மாநில அமர்வு ஆகியவற்றின் மூலம் பதிலறிக்கை தயார் செய்து தணிக்கை நிவர்த்தி செய்யப்படுகிறது. தற்போது, புதிய விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால் கூட்ட அமர்வு நாள் இறுதி செய்யப்படாமல் உள்ளது. இதனால் பதிலறிக்கை தயார் செய்த நிலையில், நிவர்த்தி செய்ய கூட்ட அமர்வு தேவையாக உள்ளது. தணிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் தொகையிலும் முன் வைப்புத் தொகையிலிருந்தும் ஈடுசெய்ய வழிவகையுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படாது. மேலும், மனுவில் தெரிவித்துள்ள தணிக்கைத் தடையில் குடிநீர் நிதி, ஆரம்பக் கல்வி நிதி மற்றும் வருவாய் மற்றும் மூலதனநிதி தலைப்பின்கீழ் உள்ள 102 எண்கள் தணிக்கை பத்திகளுக்கு பதிலறிக்கை தயார் செய்யப்பட்டு உரிய விபரங்களுடன் தணிக்கைத் தடை நீக்கம் செய்ய தயார் நிலையில் உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் இம்முறையீட்டு மனு தொடர்பாக கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

1. திருப்பூர் மாநகராட்சி ஆணையர் நிலுவையில் உள்ள அனைத்து தணிக்கை பத்திகளுக்கும் வருடவாரியாக பதில்கள் தயார் செய்து ஒரு மாதத்திற்கு கணிசமாக இலக்கு நிர்ணயம் செய்து தணிக்கை பத்திகளை நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்.

2. உள்ளாட்சி தணிக்கையை, இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அவர்கள் மாதத்திற்கு ஒருமுறை, அமர்வுக்கு (joint sitting) ஏற்பாடு செய்து நிலுவையில் உள்ள தணிக்கைத்தடைகளை உரிய காலக்கெடுவுக்குள் நீக்க உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

3. தணிக்கை பத்திகளுக்கு உரிய விவரங்களுடன் பதிலறிக்கை தயார் செய்து அவ்வப்போது நடைபெறும் தணிக்கைக் கூட்டமர்வில் (joint sitting, High level committee, State level Committee) அத்தடைகளை நீக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது

மேலும் மாநகராட்சிகள் தணிக்கை பத்திகளுக்கு விரைந்து உரிய காலத்தில் பதிலறிக்கை தயார் செய்து சமர்ப்பித்திட தேவையான அறிவுரைகள் வழங்கிட சுற்றறிக்கை ஒன்றினை அனைத்து மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் அனுப்பிட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. V.P. ரவிச்சந்திரன்,
4சி ஆகாஷ் இல்லம்,
பாளையக்காடு,
திருப்பூர் – 641 601.

2) ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

9/9